


dinakani2023@gmail.com

RNI-TNTAM/2023/88253


நமது
# தின கனி
NAMADHU DHINA KANI

www.dhinakani.com

காலை நாளிதழ்




| Vol: 02 | Issue: 278 | 4 Pages | 6.5.2025 | Tuesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 278 | 4 பக்கங்கள் | 6.5.2025 | செவ்வாய்க்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |



**அருள்கருதி அன்புடைய ராதல் பொருள்கருதிப்**
**பொச்சாப்புப் பார்ப்பார்க ணில்**

**விளக்கம்:** அருளைப் பெரிதாகக்கருதி அன்பு உடையவராய் நட த்தல், பிறருடைய பொருளைக்க வர எண்ணி அவர் சோர்ந்திருக்கும் நிலையைப் பார்ப் பவரிடத்தில் இல்லை.

## ஹாலிவுட் பேரழிவிற்கு உள்ளாகிறது பிற நாட்டு படங்களுக்கு 100 சதவீத வரி; டிரம்ப் உத்தரவு




வாஷிங்டன், மே.6

அமெரிக்க ஜனாதிபதி டொனால்டு டிரம்ப் தனக்கு சொந்தமான 'ட்ரூத்' சமூக வலைதளத்தில், " அமெரிக்க திரைப்படத் துறை (ஹாலிவுட்) மிக வேகமாக பேரழிவிற்குள்ளாகி வருகிறது. மற்ற நாடுகள் அதற்கான முயற்சியை ஒருங்கிணைந்து மேற்கொண்டுள்ளன. அது அமெரிக்க தேசத்தின் பாதுகாப்பு மற்றும் பொருளாதாரத்துக்கு அச்சுறுத்தலாக அமைந்துள்ளது.

அனைத்துக்கும் மேலாக இந்தப் படங்கள் பிரச்சார பாணியில் உள்ளன. எங்களுக்கு வேண்டியதெல்லாம் மீண்டும் அமெரிக்காவில் திரைப்படங்கள் எடுக்க வேண்டும். இந்த புதிய கட்டண முறை திரைப்படத் துறையில் நிலவும் போட்டியை சமன் செய்வதையும், அமெரிக்க தேசத்தில் உள்ள ஸ்டூடியோக்கள் தங்கள் செயல்பாடுகளைத் தொடர ஊக்குவிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது" என்று அதில் பதிவிட்டுள்ளார்.

டிரம்ப்பின் இந்த அறிவிப்பால் அமெரிக்காவில் திரையிடப்படும் இந்தியபடங்களுக்குடிக்கெட்கட்டணம்உயரும்என்றுகூறப்படுகிறது. மேலும் 100 சதவீத வரி விதிப்பால் டிக்கெட் கட்டணம், படப்பிடிப்பு, தொழில்நுட்ப பணிக்கான கட்டணம் உயரும் அபாயமும் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஹவுதி கிளர்ச்சியாளர்கள் மீது தொடர் தாக்குதல் நடத்தப்படும்; இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு



ஜெருசலேம், மே.6

இஸ்ரேல் , ஹமாஸ் இடையேயான போர் ஓராண்டுக்குமேல் நடைபெற்றுவருகிறது. இந்தபோரில் 52 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். இதனிடையே, இஸ்ரேல், ஹமாஸ் இடையேயான போரில் ஹமாஸ் ஆயுதக்குழுவினருக்கு ஏமனில் செயல்பட்டு வரும் அஹவுதி கிளர்ச்சியாளர் ஆதரவு அளித்து வருகின்றனர்.

ஹமாசுக்கு ஆதரவு அளிக்கும் வகையிலும், இஸ்ரேலுக்கு எதிரான நடவடிக்கை என்ற பெயரில் அரபிக்கடல், செங்கடலில் செல்லும் சரக்கு கப்பல்களை குறிவைத்து ஹவுதி கிளர்ச்சியாளர்கள் தாக்குதல் நடத்தி வருகின்றனர். மேலும், இஸ்ரேல் மீதும் அவ்வப்போது ஏவுகணை, டிரோன் தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

இதனிடையே, இஸ்ரேல் விமான நிலையத்தை குறிவைத்து ஹவுதி கிளர்ச்சியாளர்கள் இன்று ஏவுகணை தாக்குதல் நடத்தினர். இஸ்ரேலின் டெல் அவிவ் நகரில் உள்ள பென் குரின் சர்வதேச விமான நிலையத்தை குறிவைத்து ஏவுகணை தாக்குதல் நடத்தப்பட்டது.

இஸ்ரேலின் வான் பாதுகாப்பு அமைப்பையும் மீறி ஏவுகணை விமான நிலையத்திற்குள் உள்ளே ஓடுதளம் அருகே இருந்த சாலையில் விழுந்துள்ளது. இந்த சம்பவத்தில் 7 பேர் காயமடைந்தனர்.

இந்நிலையில், பென் குரின் விமான நிலைய தாக்குதலுக்கு பதிலடியாக ஹவுதி கிளர்ச்சியாளர்கள் மீது தொடர் தாக்குதல் நடத்தப்படும் என்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறுகையில், ஹவுதி கிளர்ச்சியாளர்களுக்கு எதிராக அமெரிக்காவுடன் இணைந்து தொடர்ந்து செயல்பட்டு வருகிறோம். ஹவுதி கிளர்ச்சியாளர்களுக்கு எதிரான நடவடிக்கைகளை ஏற்கனவே எடுத்துள்ளோம். அவர்களுக்கு எதிராக எதிர்காலத்திலும் செயல்படுவோம். இந்த முறை ஒரு தாக்குதல் நடத்திவிட்டு நிறுத்தப்போவதில்லை. ஹவுதி கிளர்ச்சியாளர்கள் மீது தொடர் தாக்குதல் நடத்தப்படும்' என்றார்.

# பாரதிதாசன் பிறந்த நாளையொட்டி சிறந்த 5 தமிழ் எழுத்தாளர்களின் படைப்புகளை நாட்டுடைமையாக்கி பரிசுத்தொகை: முதல்வர் வழங்கினார்

சென்னை

பாரதிதாசனின் 135வது பிறந்த நாளை ஒட்டி நடந்த தமிழ் வாரவிழாவில் பங்கேற்று சிறந்த 5 தமிழ் எழுத்தாளர்களின் படைப்புகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நாட்டுடைமையாக்கி பரிசுத்தொகையை வழங்கினார். "பாவேந்தர்" பாரதிதாசன் தமது இளம் வயதிலிருந்தே தமிழ்மொழி மீது தணியாத தாகமும் பற்றும் கொண்டிருந்தார். பாரதியார் புதுவையில் தங்கியிருந்தபோது, அவருடன் நெருங்கிய நட்பு கொண்டிருந்தார். பாரதியாரின் கவிதைகளில் மிகுந்த ஈடுபாடு கொண்டு அவர் போலவே இனிய கவிதைகளை எழுதினார். பாரதியார் அவர்களைத் தம் வழிகாட்டியாக ஏற்றுக் கொண்டு, பாரதிதாசன் எனத் தம் பெயரையே மாற்றிக் கொண்டார்.

பாரதிதாசன், தமிழாசிரியர், தமிழ்க் கவிஞர், திரைக்கதை ஆசிரியர், எழுத்தாளர் என்று பல்வேறு துறைகளில் தமிழ்மொழியின் இனிமையை மக்களிடம் எடுத்துச் சென்றவர். பாவேந்தர் பாரதிதாசன் 86க்கும் மேற்பட்ட நூல்கள், கதைகள், கட்டுரைகளைப் படைத்துள்ளார். அவரது 'பிசிராந்தையார்' நாடகத்திற்காக 1970ஆம் ஆண்டு 'சாகித்திய அகாடமி விருது', வழங்கப்பட்டது. 'எங்கள் வாழ்வும் எங்கள் வளமும், மங்காத தமிழென்று சங்கே முழங்கு', "தமிழுக்கும் அமுதென்று பேர், அந்தத் தமிழின்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்" போன்ற பல்வேறு காலத்தால் அழியாத பாடல்களை படைத்துள்ளார். தம் படைப்பாற்றல் மூலம் தமிழுக்குப் பல வழிகளில் தொண்டாற்றி, தமிழ் இனத்திற்கு எழுச்சியூட்டிய பாவேந்தர் பாரதிதாசன் 1964ஆம் ஆண்டு இயற்கை எய்தினார்.




தமிழ் மொழியின், தமிழ் இனத்தின் சிறப்பை உலகிற்கு எடுத்துரைத்த பாரதிதாசனை சிறப்பிக்கும் வகையில், முதலமைச்சர் 22.4.2025 அன்று சட்டமன்ற பேரவையில், விதி எண்.110ன் கீழ், 'பாரதிதாசன் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு ஏப்ரல் 29 முதல் மே 5 வரை தமிழ் வார விழா கொண்டாடப்படும்' எனவும், இவ்விழாவில் கவியரங்கங்கள் மற்றும் இலக்கிய கருத்தரங்குகள், பாரதிதாசன் இளம் படைப்பாளர் விருது, தமிழ் இலக்கியம் போற்றுவோம், பள்ளிகளில் தமிழ் நிகழ்ச்சிகள், தமிழ் இசை மற்றும் கலை நிகழ்ச்சிகள் கொண்டாடப்படும் என்று அறிவித்தார். அதன்படி, இவ்விழாவினை சிறப்பாக நடத்திட தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறையால் 50 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

மேலும், கலை பண்பாட்டுத் துறையின் இசைக் கல்லூரிகள் மற்றும் கவின்கலை கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களிடையே நடத்தப்பட்ட பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் பெருமையை போற்றும் இசை, நடனம் மற்றும் ஓவியப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு முதலமைச்சர் பரிசுகளை வழங்கி வாழ்த்தினார். இவ்விழாவில் பல்லவி இசைக்குழுவினரின் 'பாவேந்தரின் எழுச்சி பாடல்களும்', நரேந்திர குமார் நடன அமைப்பில் சென்னை தமிழ்நாடு அரசு இசைக்கல்லூரி மாணவியர்களின் தமிழ் அமுது நாட்டிய நிகழ்ச்சியும், அனர்த்தனா குழுவினரின் 'சங்கே முழங்கு' மாபெரும் நடன நிகழ்ச்சியும், தமிழ்நாடு பாடநூல் கழகத் தலைவர் திண்டுக்கல் ஐ. லியோனி அவர்களின் தலைமையில் 'பாவேந்தர் பாரதிதாசன் பாடல்களில் விஞ்சி நிற்பது மொழி உணர்வா! சமூக உணர்வா! என்ற தலைப்பில் பட்டிமன்றமும் நடைபெற்றன.

முன்னதாக, முதலமைச்சர், தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரி மாணவ, மாணவியர்களின் "தமிழ் அமுது" நடன நிகழ்ச்சியையும், அனர்த்தனா குழுவினரின் 'சங்கே முழங்கு' மாபெரும் நடன நிகழ்ச்சியையும், தமிழ்மொழியின் சிறப்புகள் குறித்த குறும்படத்தையும் பார்வையிட்டார். இந்த விழாவில், அமைச்சர்கள் துரைமுருகன், மு.பெ. சாமிநாதன், ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், மா. சுப்பிரமணியன், சேகர் பாபு, சென்னை மாநகராட்சி மேயர் ஆர். பிரியா, நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் எம். கே. மோகன், இ. பரந்தாமன், தாயகம் கவி, த. வேலு, ஜோசப் சாமுவேல், துணை மேயர் மு. மகேஷ்குமார், இந்தியன் யூனியன் முஸ்லீம் லீக் தலைவர் பேராசிரியர் கே.எம். காதர் மொஹிதீன்,

தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் க. மணிவாசன், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் தலைவர் ஆர். பாலகிருஷ்ணன், (ஓய்வு), தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் வே. ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா. வைத்திநாதன், கலை பண்பாட்டுத் துறை இயக்குநர் (முழு கூடுதல் பொறுப்பு) கவிதா ராமு, தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் ந. அருள், தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக்கழக துணை வேந்தர் சீ. சௌமியா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## கல்வி மற்றும் வாசிப்பில் கடல் கடந்து புகழ் பரப்பும் இல்லம் தேடி கல்வி மையத்திற்கு புத்தகம் வழங்கும் விழா




திருவாரூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டி வட்டம் தேசிங்குராஜபுரம் கிராமத்தில் கொரோனா காலத்தில் கல்வியை ஏழை எளிய மக்கள் பயனடையும் வகையில் தமிழ்நாடு அரசின் மிகச்சிறந்த திட்டமாக இந்திய ஒன்றிய அரசால் பாராட்டப்பட்ட இல்லம் தேடி கல்வி என்ற சிறப்பான திட்டத்தினை கடந்த நான்கு வருடமாக தன்னார்வலர் ஆசிரியர் ரேவதி இல்லம் தேடிக் கல்வி மையம் நடத்தி வருகிறார்.

இந்த மையத்தின் சிறப்பான செயல்பாடுகளில் நூல் நிலையம் அமைத்தல், மாணவர்களின் வாசிப்புத் திறனை அதிகரிக்க வாசிப்பு இயக்கம் போன்ற நிகழ்வுகள் தொடர்ச்சியாக நடைபெற்று வருகிறது.
இந்த செய்திகள் நாளிதழ் மற்றும் சமூக ஊடகங்களில் அடிக்கடி செய்திகளாக வந்துள்ளது. இந்த நூலகத்திற்கு சிங்கப்பூரின் தொடக்க நிலை தமிழ் பாட புத்தகங்களை சேகரித்துள்ளனர். அதன் தொடர்ச்சியாக தமிழ் தொப்புள்கொடி உறவுகளான இலங்கையில் இருந்து ஒரே தேசம் சிறுவர் அறக்கட்டளை உலகளாவிய அமைப்பின் நிறுவனர் முனைவர் பிரதாப் சந்திரம் அறிவுறுத்தலின் படி, அதன் இலங்கையின் ஒருங்கிணைப்பாளர் கலாநிதி சமாதான நீதவன் யூத் நிமலன் ஒருங்கிணைப்போடு, இலங்கையின் கண்டி மாவட்ட தலைவி மற்றும் இலங்கையிலுள்ள அரசு பாடசாலை அதிபரான கலாநிதி கே வசந்தகாலம் அவர்கள் தலைமையில் ஒரு குழு கலாச்சாரத்தை பறை சாற்றும் நூல்களை இலங்கையிலிருந்து கப்பல் மூலம் நாகப்பட்டினம் எடுத்து வந்து சேர்ந்தார்கள். உலக புகழ்பெற்ற யுனஸ்கோவால் அங்கீகரிக்கப்பட்ட ராய் டிரஸ்ட் இன்டர்நேஷனல் என்ற அமைப்பின் ஒரு அங்கமான விளங்குகின்ற ராய் இன்டர்நேஷனல் காஸ்மிக் ஹார்மனி பல்கலைகழகம் ( ரிச் பல்கலைகழகம்)ட் அதன் நிறுவனர் மற்றும் வேந்தர் முனைவர் துரை ராயப்பன் அபுதாபி , ராய் டிரஸ்ட் இன்டர்நேஷனல் ஒருங்கிணைப்பாளர் வேத கிருஷ்ணன் சிங்கப்பூர் ஆகியோர் ஏற்பாட்டின்படி தேசிங்கு ராஜபுரம் இல்லம் தேடி கல்வி மைய நூலகத்திற்கு நூல்கள் வழங்க ஏற்பாடு செய்தனர்.

இதன் மூலம் இலங்கையிலிருந்து கலாநிதி கே வசந்த காலம் தலைமையில் கல்வி ,மற்றும் பண்பாடு, சமயம் குறித்த நூல்களை நாகை துறைமுகத்தில் ராய் டிரஸ்ட் நாகை மாவட்ட பொறுப்பாளர்களான விக்னேஸ்வரன், அபினேஷ், பார்த்திபன், பரதன், ஆதிகேசவன், கனிபதி ,ஜோதிபாசு, ஜெகதீசன் கொண்ட குழுவினரிடம் நூற்றுக்கும் மேற்பட்ட நூல்களை வழங்கினார்கள்.

இதன் தொடர்ச்சியாக தமிழ் நாட்டு கலாச்சார பண்பாட்டை உலகெங்கும் பறை சாற்றும் விதமாக அந்த நாட்டிற்கு இங்குள்ள கலை, கலாச்சார, பண்பாடு, சமயம் சார்ந்த நூல்களை வழங்க இருப்பதாக ராய் டிரஸ்ட் இன்டர்நேஷனல் மற்றும் ரிச் யுனிவர்சிட்டியின் வேந்தர் முனைவர் துரை ராயப்பன் உறுதி அளித்தார். இலங்கையிலிருந்து வந்த குழுவை சேர்ந்தவர்கள் ஆண்டுக்கு ஒரு முறை இல்லம் தேடி கல்வி மையத்தின் நூல் நிலையத்தை பார்வையிடவும், மாணவர்களை சந்தித்து ஊக்கப் படுத்தவும், தமிழும் தமிழ் பண்பாடும் நீடிக்க செய்யும் வகையில் வருகை தருவதாக உறுதியளித்துள்ளனர்.

இந்த நிகழ்வு தமிழ்நாடு அரசின் தேசிங்குராஜபுரம் இல்லம் தேடி கல்வி மையத்திற்கு கிடைத்த ஒரு வெற்றியாக பார்க்கப்படுகிறது. அண்ணாமலை பல்கலைகழக பேராசிரியர் முனைவர் சிவ கௌரி, ராய் டிரஸ்ட் இன்டர்நேஷனல் சார்பாக அனைவரையும் வரவேற்றார். இறுதியாக ரிச் யுனிவர்சிட்டி துணைவேந்தர் தோஃபியா ராய் துரை ராயப்பன், பதிவாளர் தனலெட்சுமி துரை ராயப்பன், இல்லம் தேடி கல்வி மைய தன்னார்வலர் ரேவதி ஆகியோர் அனைவருக்கும் நன்றி கூறினார்கள். விழா இனிதே நிறைவு பெற்றது.

## அருண் ஸ்போர்ட்ஸ் அகாடமி நடத்தி வரும் "கோகோ" நினைவுக்கோப்பை மாநில அளவிலான போட்டி வெற்றிகரமாக நிறைவு பெற்றது

சென்னை, மே 6

அருண் ஸ்போர்ட்ஸ் அகாடமி நடத்திய இரண்டாம் ஆண்டு "கோகோ" நினைவுக்கோப்பை மாநில அளவிலான போட்டி, மே மாதம் 2ஆம் தேதி முதல் 4ஆம் தேதி வரை வியாசர்பாடி (S.M. Corporation Ground) மைதானத்தில் சிறப்பாக நடைபெற்றது. 17 வயதுக்குட்பட்ட மாணவர்களுக்கான இந்த போட்டியில், 16க்கும் மேற்பட்ட அணிகள் மற்றும் 250க்கும் மேற்பட்ட போட்டியாளர்கள் பங்கேற்றனர்.




மாணவர்களின் திறமையை மேம்படுத்துவதும், விளையாட்டில் ஊக்கம் அளிப்பதும்தான் இந்த நிகழ்வின் நோக்கமாகும். வெற்றியாளர்கள்: முதலாம் பரிசு – MDN Future School, கோயம்புத்தூர் இரண்டாம் பரிசு – TNGR School, கோயம்புத்தூர் மூன்றாம் பரிசு – Kongu Kalvi Nilayam, ஈரோடு நான்காம் பரிசு – Velammal West, சென்னை. போட்டியைத் தொடக்கி வைத்தவர்கள் வடசென்னை வடகிழக்கு மாவட்ட கழக செயலாளர் திரு. R.S. ராஜேஷ் (அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்), அவருடன் D. சரவணன் (Ex. MC), அம்மா பேரவை மாவட்டச் செயலாளர், வடசென்னை வடகிழக்கு, மற்றும் தமிழ் நாடு மூத்த பயிற்சியாளர் முருகப்பன் (Maruthi Cast Product) ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டு, மாணவர்களுக்கு பரிசுகளை வழங்கி உற்சாகம் அளித்தனர். அருண் ஸ்போர்ட்ஸ் அகாடமியின் சார்பாக அனைத்து ஆதரவாளர்களுக்கும், கலந்து கொண்ட பள்ளிகளுக்கும் மற்றும் விருந்தினர்களுக்கும் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.



தினகனி



# சாலை பள்ளத்தில் விழுந்து தம்பதி பலி; 4 பேர் மீது வழக்கு



திருப்பூர், மே.6

திருப்பூர் மாவட்டம் குண்டடம் அருகே உள்ள சேர்வகாரன்பாளையத்தை சேர்ந்தவர் நாகராஜ் (வயது 44). திருப்பூர் வீரபாண்டியில் உள்ள டாஸ்மாக் கடையில் தற்காலிக ஊழியராக பணியாற்றி வந்தார். இவரது மனைவி ஆனந்தி (42). இவர்களது மகள் தீக்சிதா (13). தாராபுரம் அருகே உள்ள தனியார் பள்ளியில் படித்து வருகிறாள்.

நாகராஜ் தனது குடும்பத்துடன் திருநள்ளாறு சனீஸ்வரன் கோவிலுக்கு சென்று சாமி தரிசனம் செய்ய முடிவு செய்திருந்தார். அதன்படி சம்பவத்தன்று 3 பேரும் வீட்டில் இருந்து மொபட்டில் தாராபுரம் வந்து அங்குள்ள இருசக்கர வாகன நிறுத்தத்தில் மொபட்டை நிறுத்தி விட்டு திருநள்ளாறு சென்றனர். அங்கு சாமி தரிசனம் செய்து விட்டு மீண்டும் நேற்று அதிகாலை பஸ்சில் தாராபுரம் திரும்பினர்.

பின்னர் இருசக்கர வாகன நிறுத்தத்தில் இருந்து மொபட்டை எடுத்துக்கொண்டு அங்கிருந்து 3 பேரும் சேர்வகாரன்பாளையம் நோக்கி வந்து கொண்டிருந்தனர். மொபட்டை நாகராஜ் ஓட்டினார். அவருக்கு பின்னால் தீக்சிதாவும், ஆனந்தியும் அமர்ந்து இருந்தனர். இவர்கள் தாராபுரம்காங்கயம் சாலையில் வந்து கொண்டிருந்தனர். அந்த சாலையில் குள்ளாய்பாளையத்தை அடுத்த மாந்தோப்பு பகுதியில் சாலை விரிவாக்க பணி நடைபெற்று வருகிறது.

மேலும் அந்த பகுதியில் பாலம் அமைப்பதற்காக 15 அடிக்கு குழி தோண்டப்பட்டு உள்ளது. இந்த குழியை சுற்றி ஒரு சிறிய தடுப்பு கூட வைக்கப்படவில்லை. இந்த நிலையில் எதிர்பாராத விதமாக சாலையில் தோண்டப்பட்டிருந்த 15 அடி ஆழ குழிக்குள் மொபட் விழுந்து 3 பேரும் நிலை குலைந்தனர்.

இந்த விபத்தில் பலத்த காயம் அடைந்த 3 பேரும் குழிக்குள் உயிருக்கு போராடிக்கொண்ருந்தனர். இதையடுத்து காப்பாற்றுங்கள், காப்பாற்றுங்கள் என்று தீக்சிதா அபய குரல் எழுப்பினாள். ஆனால் ரத்த வெள்ளத்தில் கடுமையான வலிக்கு மத்தியில் சிறுமியின் அபயக் குரல் 15 அடிக்கு மேலே சாலையில் சென்றவர்களுக்கு கேட்கவில்லை.

விடியவிடிய 3 பேரும் உயிருக்கு போராடியுள்ளனர். பின்னர் காலையில் அந்த வழியாக சென்றவர்கள் குழிக்குள் இருந்து சிறுமியின் குரல் வருகிறதே என்று எட்டிப்பார்த்த போது அங்கு மொபட்டுடன் 3 பேர் அடிபட்டு கிடப்பதை பார்த்து அதிர்ச்சி அடைந்தனர்.

இதையடுத்து போலீசாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. உடனே போலீசாரும், பொதுமக்களும் விரைந்து வந்து அவர்களை மீட்டு தாராபுரம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அங்கு நாகராஜ் மற்றும் ஆனந்தியை பரிசோதனை செய்த டாக்டர்கள் அவர்கள் இருவரும் ஏற்கனவே இறந்து விட்டதாக தெரிவித்தனர். காலில் பலத்த காயம் அடைந்த தீக்சிதாவுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இந்த விபத்து பற்றிய தகவல் அறிந்ததும் நாகராஜின் உறவினர்கள் தாராபுரம் அரசு மருத்துவமனைக்கு வந்து முற்றுகையிட்டு வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். இந்த விபத்து குறித்து போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரித்து வந்தனர்.

இந்த விபத்து பற்றிய தகவல் அறிந்ததும் திருப்பூர் மாவட்ட கலெக்டர் கிறிஸ்துராஜ், போலீஸ் சூப்பிரண்டு யாதவ் கிரீஷ் அசோக் ஆகியோர் சம்பவ இடத்திற்கு வந்து ஆய்வு மேற்கொண்டனர். அப்போது சாலை பணி மேற்கொள்ளும் ஒப்பந்ததாரருக்கு நோட்டீஸ் வழங்கி உரிய நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்திருந்தனர். இந்நிலையில் இந்த சம்பவம் தொடர்பாக 4 பேர் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது. இதன்படி ஒப்பந்ததாரர் சிவக்குமார், பொறியாளர் குணசேகரன், நெடுஞ்சாலைத்துறை உதவி பொறியாளர் கணேஷ், மேற்பார்வையாளர் கவுதம் உள்ளிட்டோர் மீது 3 பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளதாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# திருப்பூர் வடக்கு நெடுஞ்சாலைத்துறை நான்கு வழிச்சாலை விரிவாக்க பணி

திருப்பூர் நெடுஞ்சாலை வடக்கு உட்கோட்டத்திற்கு உட்பட்ட. மாநில நெடுஞ்சாலை ஆன திருப்பூர். காங்கயம் சாலை கிலோமீட்டர்,11/0.22/0. நாச்சிபாளையம் முதல் சிவன் மலை வரை அதிக வாகனங்கள் செல்லும் நெடுஞ்சாலை வழியாக கனரக வாகனங்கள் மற்றும் நான்கு சக்கர வாகனம் இருசக்கர வாகனங்கள் பள்ளி கல்லூரி பேருந்துகள் என அதிக போக்குவரத்து நெரிசல்களை தவிர்க்க .பொதுமக்களுக்கு எந்த இடையூறும் இல்லாமலும். வாகனங்கள் தங்கு தடை இன்றி சென்றுவர சி ஆர் ஐ டி பி .2025/26. திட்டத்தின் கீழ் நா வழி பாதையாக சாலை விரிவாக்கம் செய்வதற்காக. தமிழக அரசுக்கு முன்மொழிவு அனுப்பப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து எச்சரிக்கை நடவடிக்கையாக அங்கு அமைந்துள்ள ஆக்கிரமிப்புகளை கண்டறியும் பொருட்டு நில அளவிடும் பணி மேற்கொள்ளப்பட்டு உள்ளது அரசு ஒப்புதல் கிடைக்கப்பட்டதும் சாலை விரிவாக்க பணி உடனே துவங்கப்பட்டு. பொதுமக்கள் பயன்பாட்டிற்கு விரைவில் கொண்டு வரப்படும் என திருப்பூர் நெடுஞ்சாலைத்துறை கோட்ட பொறியாளர் ரத்தினசாமி. உதவி கோட்ட பொறியாளர் விஜயகுமார். இளநிலை பொறியாளர் ராஜேஷ் இவர்கள் தெரிவித்தனர்.

# திண்டுக்கல்லில் 30வது மாவட்ட அளவிலான ஆணழகன் போட்டி




திண்டுக்கல்லில் 30வது மாவட்ட அளவிலான ஆணழகன் போட்டி நடைபெற்றது

திண்டுக்கல் மாவட்ட ஜிம் உரிமையாளர் சங்கம் திண்டுக்கல் மாவட்ட அமெச்சூர் ஆணழகன் சங்கம் சார்பில் மாவட்ட அளவிலான 30 வது அமெச்சூர் ஆணழகன் போட்டி தனியார் மஹாலில் நடைபெற்றது.

இதில் திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள 28 உடற்பயிற்சி கூடங்களிலிருந்து 200க்கும் மேற்பட்ட வீரர்கள் கலந்து கொண்டனர். 50, 55, 60 ,65 70, 75 , 80, 85 கிலோ ஆகிய எடை பிரிவுகளில் போட்டிகள் நடைபெற்றது.

இதில் சப் ஜூனியர் ,ஜூனியர், சீனியர், மாஸ்டர் என்ற நிலையில் போட்டி நடத்தப்பட்டன. உடற்கட்டு கோணங்கள் அடிப்படையில், தேசிய நடுவர்கள் மயில்சாமி, சிவக்குமார் ஆண்ட்ரூ ஆகியோர் கலந்து கொண்டு மதிப்பீடு செய்தனர்

திண்டுக்கல் ENDURA ஜிம்மைச் சேர்ந்த திவான் பெக்ராத் முதல் பரிசு பெற்று திண்டுக்கல் ஆணழகனாக தேர்வு செய்யப்பட்டார்.

இரண்டாவது பரிசை டைட்டான் ஜிம்மைச் சேர்ந்த யாசர் அரபத் , மூன்றாம் பரிசை வாரியர் ஜிம்மைச் சேர்ந்த கைலாஷ் பெற்றனர்.

திண்டுக்கல் மாவட்ட ஹாக்கி சங்கத்தின் தலைவர் நாட்டாமை காஜா மைதீன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பரிசுகளை வழங்கி கௌரவித்தார்.

இப்போ போட்டியினை திண்டுக்கல் மாவட்ட உடற்பயிற்சி உரிமையாளர் சங்க தலைவர் ஜான் வில்லியம் லாரன்ஸ் செயலாளர் சதீஷ்குமார் ஆர்மச்சூர் சங்க செயலாளர் ராஜ்குமார் மற்றும் நிர்வாகிகள் போட்டிகளை ஏற்பாடு செய்திருந்தனர்.

இப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு சான்றிதழ்களும் நினைவு பரிசுகளும் வழங்கப்பட்டன.

பயிற்சியாளர்கள், பெற்றோர்கள், விளையாட்டு ஆர்வலர்கள், பெற்றோர்கள் என பலரும் போட்டிகளை கண்டு ரசித்தனர். இதில் முதல் பரிசு பெற்ற ஆணழகன் அவரது தாயார் சந்தோஷத்தில் மேடையிலே கட்டித்த ழுவி முத்தமிட்ட காட்சி பார்வையாளர்களிடையே நெகழ்ச்சியை ஏற்படுத்தியது.

# கோவில் திருவிழாவில் நடனம் ஆடும்போது தகராறு: கத்தியால் குத்தி சிறுவன் கொலை



குளித்தலை, மே.6

கரூர் மாவட்டம் குளித்தலையில் கோவில் திருவிழாவில் ஏற்பட்ட மோதலில் கத்தியால் குத்தி சிறுவன் கொல்லப்பட்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

முன்னதாக மாரியம்மன் கோவில் பூச்சொரிதல் நிகழ்வில் நடனம் ஆடிக் கொண்டிருந்த ஷியாம் சுந்தர் (17) மீது நாகேந்திரன் விழுந்துள்ளார். ஓரமாக சென்று நடனம் ஆடுங்கள் என அவர் கூறியதற்கு நாகேந்திரன் கத்தியால் குத்தியதில் நிகழ்விடத்திலேயே ஷியாம் சுந்தர் உயிரிழந்தார்.

கத்திகுத்தை தடுக்க வந்த அஜய், வசந்தகுமார் ஆகிய இருவரையும் கத்தியால் நாகேந்திரன் தாக்கியதாக கூறப்படுகிறது. சிறுவன் உயிரிழந்த நிலையில், மற்ற இருவரும் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்த சம்பவம் தொடர்பாக 2 தனிப்படைகள் அமைத்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# வணிகர் தினம்: தமிழகத்தில் கடைகள் அடைப்பு




சென்னை, மே.6

ஆண்டுதோறும் மே 5ந் தேதி வணிகர் தினம் கொண்டாடப்பட்டு வருகிறது. அன்றைய தினம் வணிகர் சங்கங்கள் மாநாடுகளை நடத்துவது வழக்கம். அந்த வகையில், இன்று தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு மாநாடு செங்கல்பட்டை அடுத்த மதுராந்தகத்தில் இன்று மாலை நடக்கிறது. பேரமைப்பின் தலைவர் ஏ.எம்.விக்கிரமராஜா தலைமையில் நடைபெறும் இந்த மாநாட்டில் முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் கலந்து கொண்டு பேசுகிறார்.

இதேபோல், தமிழ்நாடு அனைத்து வணிகர் சங்கங்களின் பேரமைப்பு மாநாடு மறைமலைநகரில் இன்று நடக்கிறது. கொளத்தூர் த.ரவி தலைமையில் நடைபெறும் இந்த மாநாட்டில் அ.தி.மு.க. பொதுச் செயலாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவருமான எடப்பாடி பழனிசாமி கலந்துகொண்டு பேசுகிறார்.

இதேபோல், பல்வேறு வணிகர் சங்கங்கள் சார்பிலும் வணிகர் தின மாநாடுகள் நடக்கின்றன. இதனால்,தமிழகம்முழுவதும் இன்று கடைகள் அடைக்கப்பட்டுள்ளன. சென்னை கோயம்பேடு மார்க்கெட்டுக்கும் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால், பல இடங்கள் வெறிச்சோடி காணப்பட்டன.

# ஓடும் ரெயிலில் இளம்பெண்ணிடம் சில்மிஷம்: வடமாநில வாலிபர் கைது



சேலம், மே.6

கேரள மாநிலம் எர்ணாகுளத்தில் இருந்து பீகார் மாநிலம் பாட்னாவிற்கு கோவை, திருப்பூர், ஈரோடு, சேலம் வழியாக சிறப்பு எக்ஸ்பிரஸ் ரெயில் (வண்டி எண்06085) இயக்கப்பட்டு வருகிறது. நேற்று முன்தினம் இந்த ரெயிலில் எஸ்6 முன்பதிவு பெட்டியில் மேற்கு வங்காளம் மாநிலம் ஜல்பைக்குரி பகுதியை சேர்ந்த 28 மற்றும் 22 வயது கொண்ட அக்காள்தங்கை பாலக்காடு ரெயில் நிலையத்தில் இருந்து பயணம் செய்தனர். இவர்கள் இருந்த இருக்கையின் அருகில் மற்றொரு இருக்கையில் சுமார் 30 வயது மதிக்கத்தக்க வாலிபர் ஒருவர் இருந்துள்ளார்.

இந்த ரெயில் திருப்பூர் பகுதியில்வந்தபோது, அந்த வாலிபர் திடீரென 22 வயது இளம் பெண்ணுக்கு இடுப்பு மற்றும் உடல் பகுதிகளில் தொட்டு பாலியல் தொல்லை கொடுத்து வந்தார். இதனால் அதிர்ச்சி அடைந்த அந்த இளம் பெண், அந்த வாலிபரை கண்டித்தார். ஆனாலும் அவர் தொடர்ந்து பாலியல் தொல்லை கொடுத்தார்.

இதையடுத்து உடனே ஆன்லைன் மூலம் ரெயில்வே போலீசில் சம்பந்தப்பட்ட பெண் புகார் செய்தார். இதைத்தொடர்ந்து பாட்னா எக்ஸ்பிரஸ் ரெயில் சேலம் ஜங்ஷன் ரெயில் நிலையத்திற்கு வந்ததும், சம்பந்தப்பட்ட பெட்டிக்கு சேலம் ரெயில்வே போலீசார் சென்று விசாரித்தனர்.

அப்போது, ரெயிலில் பெண்ணுக்கு பாலியல் தொல்லை கொடுத்த வாலிபரை மடக்கி பிடித்து விசாரித்தனர். இதையடுத்து அந்த பெண்ணிடம் முறையாக புகார் பெற்று விசாரணை நடத்தினர்.

இதில், அந்த வாலிபர் பீகார் மாநிலம் சரண் மாவட்டத்தை சேர்ந்த முன்னாகுமார் (32) என்பது தெரியவந்தது. அவர் மீது பாலியல் தொல்லை கொடுத்தது, பெண்களுக்கு எதிரான வன்கொடுமை தடுப்பு சட்டம் ஆகிய பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்து கைது செய்தனர்.

பின்னர் கைது செய்யப்பட்ட வாலிபரை சேலம் மகளிர் கோர்ட்டில் ஆஜர்படுத்தி மத்திய சிறையில் அடைத்தனர்.

# தங்கப் புதையல் எடுத்துக் கொடுப்பதாக கூறி தம்பதியிடம் ரூ.8 லட்சம் பறித்த கும்பல் கைது



கிருஷ்ணகிரி, மே.6


கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் அருகே சாந்தபுரம் செந்தமிழ் நகரைச் சேர்ந்த தம்பதி ராதம்மா குள்ளப்பா. பால் வியாபாரம் செய்து வருகின்றனர். இந்த நிலையில் கர்நாடக மாநிலம் பெங்களூருவைச் சேர்ந்த லட்சுமி காந்த் என்ற நபர் உங்கள் வீட்டுக்கு அருகில் தங்கப் புதையல் இருக்கிறது என்று ராதம்மா குள்ளப்பா தம்பதியிடம் ஆசை காட்டியுள்ளார்.

மேலும் புதையலை எடுக்க ஒரு கும்பலையும் அழைத்து வந்துள்ளார். இரவில் குழி தோண்டிய அந்த கும்பல் தம்பதியின் கவனத்தை திசை திருப்பி, செயற்கையாகப் புதைக்கப்பட்ட பானையிலிருந்து 2 தங்கக் காசுகளை எடுத்துக் காண்பித்து நம்ப வைத்துள்ளனர். மேலும் இன்னும் ஆழத்தில் பெரிய புதையல் இருப்பதாக கூறி அதை எடுக்க ரூ.8 லட்சம் பெற்றுள்ளனர்.

பின்னர் மற்றொரு பானையை எடுத்துக் கொடுத்து, அந்த பானைக்கு தினமும் பூஜை செய்து வர வேண்டும் என்றும், பூஜை முடிவதற்குள் திறந்து பார்த்தால் ரத்த வாந்தி எடுத்து சாவீர்கள் என்றும் பயத்தை ஏற்படுத்தி உள்ளனர். அதை நம்பி அவர்களும் தினமும் பூஜை செய்து வந்துள்ளனர். சில நாட்கள் கழித்து அந்த கும்பல் மேலும் தங்களுக்கு பணம் தேவை என்று ராதம்மாவிடம் கேட்டுள்ளனர்.

இந்த நிலையில் ராதம்மாவின் மகன் சந்தேகமடைந்து புதையல் இருப்பதாக கூறிய பானையை திறந்து பார்த்துள்ளார். அதில் ஒன்றும் இல்லாததை கண்டு அதிர்ச்சியடைந்த அவர், போலீசில் புகார் அளித்தார். இந்த புகாரின் அடிப்படையில் தம்பதியை ஏமாற்றி பணம் பறித்த 10 பேர் கொண்ட கும்பலை போலீசார் கைது செய்தனர். மேலும் தலைமறைவாக உள்ள 3 பேரை தேடி வருகின்றனர்.

# சூறாவளி காற்றுடன் மழை: பூந்தமல்லியில் தியேட்டரின் மேற்கூரை இடிந்து விழுந்ததால் பரபரப்பு



திருவள்ளூர் மே.6

திருவள்ளூர் மாவட்டம் பூந்தமல்லி அடுத்த செம்பரம்பாக்கம் பகுதியில் பெங்களூரு தேசிய நெடுஞ்சாலையோரம் உள்ள ஈ.வி.பி.பிலிம் சிட்டி அருகில் சந்தோஷ் சினிமாஸ் என்ற தியேட்டர் செயல்பட்டு வருகிறது. பூந்தமல்லி மற்றும் அதன் சுற்றியுள்ள பகுதிகளில் நேற்று மாலை திடீரென பலத்த காற்றுடன் கனமழை பெய்தது. அப்போது சூறவாளி காற்றின் வேகத்தால் அந்த தியேட்டரின் முகப்பு மற்றும் மேற்கூரை பகுதிகள் ஒன்றன்பின் ஒன்றாக பிய்த்துக்கொண்டு காற்றில் பறந்தது.

மேலும் அந்த மேற்கூரைகள் ஒன்றின் மீது ஒன்றாக இடிந்து விழுந்தது. தியேட்டரின் மேற்பகுதி மள, மளவென சீட்டுக்கட்டு போல் காற்றில் பறந்துசரியதொடங்கியது. இந்த சத்தம் கேட்டு, தியேட்டருக்குள் படம் பார்த்துக் கொண்டிருந்த ரசிகர்கள் அலறியடித்தபடி தியேட்டரை விட்டு வெளியே ஓடிவந்தனர்.

தியேட்டர் நிர்வாகம் உடனடியாக படம் திரையிடப்படுவதை நிறுத்தி, காட்சிகளை ரத்து செய்தது. இதைத் தொடர்ந்து தியேட்டர் நிர்வாகம் சார்பில் உடனடியாக கிரேன் உதவியுடன் தியேட்டரின் மேற்கூரையின் சரிந்த பகுதிகளை சீரமைக்கும் பணியில் ஈடுபட்டனர்.

இந்த சம்பவத்தால் அந்த பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

# விவேகானந்தர் மண்டபத்துக்கு படகு சேவை நிறுத்தம்: சுற்றுலா பயணிகள் ஏமாற்றம்



கன்னியாகுமரி, மே.6

சர்வதேச சுற்றுலாத்தலமான கன்னியாகுமரிக்கு தினமும் ஆயிரக்கணக்கான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் வந்து செல்கிறார்கள். ஆண்டு முழுவதும் இங்கு சுற்றுலா பயணிகள் வந்து சென்றாலும் ஏப்ரல் மற்றும் மே மாதம் கோடைக்கால சீசனாக கருதப்படுகிறது.

இந்த சீசனில் தற்போது குடும்பம், குடும்பமாக சுற்றுலா பயணிகள் வந்து செல்கிறார்கள். நேற்று வார விடுமுறை என்பதால் சுற்றுலா பயணிகள் கூட்டம் வழக்கத்தை விட அதிகமாக இருந்தது. அவர்கள் கடலின் நடுவே அமைந்துள்ள விவேகானந்தர் நினைவு மண்டபத்தை பார்வையிட படகு துறையில் நீண்ட நேரம் வரிசையில் காத்திருந்தனர். பொதுவாக விவேகானந்தர் மண்டபத்துக்கு செல்ல 3 படகுகள் இயக்கப்படுவது வழக்கம். இவற்றில் ஒரு படகு பராமரிப்பு பணிக்கு சென்றுள்ளதால் தற்போது 2 படகுகள் மட்டுமே இயக்கப்படுகிறது.

இந்தநிலையில் நேற்று காலை 8 மணிக்கு வழக்கம் போல் படகு சேவை தொடங்கியது. ஆனால் காலை 9 மணிக்கு திடீரென படகு போக்குவரத்து நிறுத்தப்பட்டது. அதாவது விவேகானந்தர் மண்டபத்துக்கு இயக்கப்பட்ட 2 படகுகளில் ஒரு படகு சேதமடைந்ததால் போக்குவரத்து நிறுத்தப்பட்டதாக தகவல் பரவியது. இதுகுறித்து பூம்புகார் கப்பல் போக்குவரத்து கழகத்திடம் கேட்ட போது கடலில் நீர் மட்டம் தாழ்வு ஏற்பட்டதால் படகு சேவை தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இதனால் படகு துறையில் சுட்டெரிக்கும் வெயிலில் கால்கடுக்க காத்திருந்த சுற்றுலா பயணிகள் ஏமாற்றம் அடைந்தனர். பின்னர் 5 மணி நேரம் கழித்து கடல்நீர்மட்டம் இயல்பு நிலைக்கு திரும்பியதால் மதியம் 2 மணிக்கு மீண்டும் படகு சேவை தொடங்கியது. அதன் பின்னர் சுற்றுலா பயணிகள் படகில் சென்று விவேகானந்தர் நினைவு மண்டபத்தை கண்டு களித்தனர். பிறகு அங்கிருந்து கண்ணாடி நடைபாலத்தில் நடந்து சென்று கடலின் அழகை ரசித்த அவர்கள் திருவள்ளுவர் சிலை பகுதிக்கும் சென்று பார்வையிட்டனர்.

# திருமங்கலம் அருகே ஜல்லிக்கட்டு போட்டி: 60 பேர் காயம்



மதுரை மே.6

மதுரை மாவட்டம் திருமங்கலம் அருகே உள்ள கரடிக்கல் கிராமத்தில் சுந்தரராஜபெருமாள் கோவில் திருவிழாவை முன்னிட்டு ஜல்லிக்கட்டு போட்டி விமரிசையாக நடைபெற்றது. போட்டியில் 1,150 காளைகளும், 450 மாடுபிடி வீரர்களும் பங்கேற்க அனுமதிக்கப்பட்டனர்.

போட்டியில் பங்கேற்கும் காளைகள் அனைத்துக்கும் கட்டில், பீரோ, அண்டா, குத்துவிளக்கு, சைக்கிள், தங்க காசு உள்ளிட்ட பரிசு பொருட்கள் வழங்கப்பட்டன. மைதானத்தில் சீறிப்பாய்ந்து சென்ற காளைகளை வீரர்கள் போட்டி போட்டு அடக்கினர். மொத்தம் 440 காளைகள் அவிழ்த்து விடப்பட்டன. போட்டியில் காளைகள் முட்டியதில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த நாகமலை புதுக்கோட்டை போலீஸ் சிறப்பு சப் இன்ஸ்பெக்டர் ஆனந்தன் உள்பட 60 பேர் காயம் அடைந்தனர். இதில் 3 பேர் மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். மதுரை மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு அர்விந்த் தலைமையில் 700க்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.

# நகை வியாபாரியை கட்டி போட்டு ரூ.20 கோடி வைரம் திருடப்பட்ட சம்பவம் 4 பேர் கைது



சென்னை, மே.6


அண்ணா நகரைச் சேர்ந்தவர் வைர நகை வியாபாரி சந்திரசேகர். இவர் வைரங்களை மொத்தமாக வாங்கி விற்பனை செய்து வருகிறார். இவரிடம், மற்றொரு வியாபாரி ரூ.20 கோடி மதிப்பில் வைரம் வேண்டும் என கேட்டுள்ளார். அவற்றை வடபழனியில் உள்ள பிரபல ஓட்டலுக்கு கொண்டு வரும்படி கூறியுள்ளார்.

அதன்படி, சந்திரசேகர் ரூ.20 கோடி மதிப்புள்ள வைரநகைகளுடன் நேற்று வடபழனியில் உள்ள ஓட்டலுக்கு சென்றார். அங்கு ஓட்டல் அறையில் மறைந்திருந்த 4 பேர் சந்திரசேகரை கட்டி போட்டுவிட்டு ரூ.20 கோடி மதிப்பிலான வைர நகைகளுடன் காரில் தப்பிச் சென்றனர். இந்த சம்பவம் தொடர்பாக வடபழனி போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தினர்.

ஓட்டலில் உள்ள சிசிடிவி கேமரா காட்சிகளை அடிப்படையாக வைத்து வைரத்துடன் தப்பிய கும்பலை பிடிக்க 2 தனிப்படைகள் அமைக்கப்பட்டது. இந்த நிலையில் வைரத்தை திருடிவிட்டு தப்பிய 4 பேரை தூத்துக்குடி போலீசார் கைது செய்துள்ளனர். சிவகாசி அருகே காரில் சுங்கச்சாவடியை கடக்க முயன்றபோது போலீசார் கைது செய்தனர்.

லண்டன் ராஜன், அவரது நண்பர், உதவியாளர் என 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட 4 பேரையும் சென்னை அழைத்து வர போலீசார் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர்.

# தி.மு.க. பொதுக்கூட்டத்தில் திடீரென சாய்ந்த மின்விளக்கு கம்பம்.. நூலிழையில் தப்பிய ஆ.ராசா எம்.பி.



மயிலாடுதுறை, மே.6

மயிலாடுதுறை நகர தி.மு.க. சார்பில் பட்ஜெட் விளக்க பொதுக்கூட்டம் சின்ன கடை வீதியில் நேற்று இரவு நடந்தது. இதில் முன்னாள் மத்திய மந்திரி ஆ.ராசா எம்.பி. பேசிக்கொண்டு இருந்தார். அப்போது பலத்த காற்று வீசியதால் மேடையின் அருகே பொருத்தப்பட்டிருந்த அதிக வெளிச்சம் தருவதற்காக அமைக்கப்பட்டு இருந்த மின்விளக்கு கம்பம் திடீரென்று சாய்ந்து ஆ.ராசா எம்.பி. பேசிக்கொண்டு இருந்த மைக் வைக்கப்பட்டு இருந்த 'போடியம்' மீது விழுந்தது. உடனே சுதாரித்துக்கொண்ட ஆ.ராசா எம்.பி. தான் பேசிக்கொண்டு இருந்த மேடை முன்பு இருந்து சற்று தள்ளி நகர்ந்து சென்று விட்டார். இதனால் அவர் எந்தவித காயமும் இன்றி நூலிழையில் உயிர் தப்பினார். இதனையடுத்து உடனடியாக பேச்சை நிறுத்திய ஆ.ராசா எம்.பி. அங்கிருந்து காரில் ஏறி புறப்பட்டு சென்றார். தொடர்ந்து மழை பெய்ததால் கூட்டம் முடிந்ததாக அறிவிக்கப்பட்டது. அத்துடன் கூட்டம் நடந்த இடத்தில் மின்சாரமும் துண்டிக்கப்பட்டது.

ஆ.ராசா எம்.பி. பேசிக்கொண்டு இருந்த மைக் மீது மின்கம்பம் விழுந்தது இதில் அவர் நூலிழையில் உயிர்தப்பிய சம்பவத்தால் மயிலாடுதுறையில் நேற்று பெரும் பரபரப்பு நிலவியது.

# திருச்சியிலும் ஒரு கிளாம்பக்கம் பஞ்சப்பூர் ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் 9ந்தேதி திறப்பு



திருச்சி, மே.6

திருச்சி பஞ்சப்பூர் ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் வருகிற 9ந்தேதி தமிழக முதல்அமைச்சர் மு.க. ஸ்டாலினால் திறந்து வைக்கப்படுகிறது. இனி 9ந்தேதியில் இருந்து சத்திரம் பேருந்து நிலையத்திலிருந்தோ அல்லது மத்திய பேருந்து நிலையத்திலிருந்தோ பஸ்கள் புறப்படாது.

அனைத்து பேருந்துகளும் திருச்சி புதிய (பஞ்சப்பூர்) ஒருங்கிணைந்த பேருந்து நிலையத்தில் இருந்து தான் கிளம்பும். இதில், பெரம்பலூர், அரியலூர், ஜெயங்கொண்டம், கடலூர், துறையூர் மார்க்கமாக செல்லும் அனைத்து பேருந்துகளும் அடங்கும். பெரம்பலூர் மக்கள் சத்திரம் பஸ் ஸ்டாண்ட் செல்ல வேண்டும் என்றால், ஒன்று நம்பர் ஒன் டோல்கேட்டில் இறங்கி பஸ் மாற வேண்டும். அல்லது அவர்கள் பால் பண்ணையில் இறங்கி பஸ் மாற வேண்டி இருக்கும். (ரூட்: நம்பர் ஒன் டோல் கேட், பால் பண்ணை, டி.வி.எஸ். டோல்கேட், மன்னார்புரம் பஞ்சப்பூர் பேருந்து நிலையம்) நகர பேருந்துகள் வழக்கம் போல் சத்திரம் பேருந்து நிலையத்தில் இருந்தே கிளம்பும். மற்ற அனைத்து பெரிய நகரங்களுக்கும் பஞ்சப்பூர் ஒருங்கிணைந்த பேருந்து நிலையத்திலிருந்துதான் கிளம்பும்

# நீட் அச்சத்தில் மாணவி தற்கொலை: 'ஆட்சிக்கு வந்ததும் பாருங்கள் என்று பேசியதெல்லாம் எங்கே போனது?' எடப்பாடி கேள்வி



சென்னை, மே.6

அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டு இருப்பதாவது;

"இன்று நீட் தேர்வு நடைபெற்ற நிலையில், செங்கல்பட்டு மாவட்டம் மேல்மருவத்தூர் அருகே கயல்விழி என்ற மாணவி நீட் தேர்வு அச்சத்தால் தன் இன்னுயிரை மாய்த்துக் கொண்டதாக வரும் செய்தி அதிர்ச்சியளிக்கிறது.

தமிழ்நாட்டில் ஆட்சி, நாடாளுமன்றத்தில் 39 எம்.பி.க்கள் என அத்தனை அதிகாரங்களையும் திமுக பெற்றது "நீட் தேர்வு ரத்து" என்ற வாக்குறுதியால் தானே?

"ரகசியம் இருக்கிறது, ஆட்சிக்கு வந்ததும் பாருங்கள்" என்று வாய் சவடால் பேசியதெல்லாம் எங்கே போனது? வெட்கம், மானம், சூடு, சுரணை எல்லாம் எங்கே போனது?

உங்களுடைய தேர்தல் அரசியலுக்கான ஒற்றைப் பொய்யால் மட்டுமே 21 மாணவ மாணவியரின் உயிர் பறிபோய் இருக்கிறது. இன்னும் எத்தனை பிள்ளைகள் மு.க.ஸ்டாலின் அவர்களே? உங்களுக்கு இப்போது கூட மனசாட்சி உறுத்தவில்லையா?

"நீட் ஒழிய வேண்டும் என்றால் '2.ஓ' வர வேண்டும்" என்று கூச்சமின்றி திமுகவினர் 2026ல் வாக்கு கேட்கும் போது, "உரிய மரியாதையுடன்" மக்கள் பதில் அளிப்பார்கள்! இத்தனை மாணவ மாணவியரின் மரணங்களுக்கு உரிய நீதியை, மக்கள் நிச்சயம் வழங்குவார்கள்!

இவ்வாறு அதில் அவர் தெரிவித்துள்ளார்.

# இலங்கை கடற் கொள்ளையர் அட்டூழியம்.. மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் முத்தரசன்



சென்னை, மே.6

இந்தியக்கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநில செயலாளர் முத்தரசன் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

நாகப்பட்டினம் மாவட்டம் அக்கரைப் பேட்டையை சேர்ந்தவர் மீன்பிடி படகில் ஆனந்த், முரளி, சாமிநாதன், வெற்றிவேல் அன்பரசன் ஆகியோர் கடலில் மீன் பிடிக்க சென்றுள்ளனர். இவர்கள் கடந்த இரண்டாம் தேதி கோடியக்கரைக்கு தென் கிழக்கில் மீன் பிடித்துக் கொண்டிருந்த போது இலங்கை கடற்கொள்ளையர்களால் தாக்கப்பட்டுள்ளனர். இந்த தாக்குதலில் படுகாயம் அடைந்த மீனவர்களிடம் இருந்து மீன்பிடி வலை, ஜிபிஎஸ் கருவி, மீன்கள் அனைத்தையும் கொள்ளையடித்து சென்றுள்ளனர்.

இதே போல் செருதூர் மற்றும் ஆறுகாட்டுத்துறை கிராமங்களில் இருந்து மீன்பிடிக்க சென்ற 19 மீனவர்களை இலங்கை கடற்கொள்ளையர்கள் கொலை வெறித் தாக்குதல் நடத்தி, அவர்களிடம் இருந்த பொருள்களையும் மீன்களையும் கொள்ளை அடித்து சென்றுள்ளனர். கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்த மீனவர்களை ஐந்து இடங்களில் கடற்கொள்ளையர்கள் தாக்கியுள்ளனர். இதில் படுகாயம் அடைந்த மீனவர்கள் நாகை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இவர்களிடம் இருந்து ரூ 10 லட்சத்துக்கும் அதிகமான மதிப்புள்ள பொருட்களும், மீன்களும் கொள்ளையடித்து சென்றுள்ளனர். வங்கக்கடலில் தமிழக மீனவர்கள் இறங்கி மீன்பிடிக்க முடியாத நெருக்கடியை இலங்கை கடற்படையும், கடற்கொள்ளையர்களும் ஏற்படுத்தி வருகிறார்கள். இதனால் பல்லாயிரம் மீனவர்களின் வாழ்வாதாரம் பறிபோகும் பேராபத்து ஏற்பட்டுள்ளது. கடற்கொள்ளையர்களின் அட்டூழியத்தை இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வன்மையாக கண்டிக்கிறது.

தமிழ்நாடு அரசும், முதல்அமைச்சரும், அரசியல் கட்சிகளும், மீனவர் சங்கங்களும், ஒன்றிய அரசின் தலையீட்டுக்கும் தீர்வுக்கும் தொடர்ந்து முறையிட்டு வரும் போதும், அவைகள் அனைத்தும் செவிட்டு செவியில் ஊதிய சங்காக முடிந்து விடுகிறது. இதனால் ஏற்பட்டு வரும் அசாதாரண சூழலை கருத்தில் கொண்டு பாஜக மத்திய அரசும், பிரதமரும் அரசியல் உறுதியுடன் நடவடிக்கை மேற்கொண்டு, இலங்கை அரசுடன் தொடர்ந்து பேசி தமிழக மீனவர்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்க வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சென்னை பூந்தமல்லியில் உள்ள ஓட்டலில் சாப்பிட்ட உணவில் முழு தேரை இருந்ததால் பரபரப்பு



சென்னை, மே.6

சென்னை பூந்தமல்லி பேருந்துநிலையம் அருகே தனியார் உணவகம் ஒன்று செயல்பட்டு வருகிறது. இந்த ஓட்டலுக்கு சாப்பிட வந்த ஒரு குடும்பத்தினர் ஒரு பிரியாணி மற்றும் அசைவ உணவுகளை ஆர்டர் செய்து சாப்பிட்டுள்ளனர். அப்போது, கடையின் ஊழியர் கொண்டு வந்த மட்டன் குழம்பை ஊற்றி சாப்பிட முயன்றுள்ளனர். அதில், முழு தேரை ஒன்று உயிரிழந்த நிலையில் கிடந்தது. இதனைக்கண்டு வாடிக்கையாளர்கள் அதிர்ச்சியடைந்தனர். இது தொடர்பாக ஓட்டல் ஊழியர்களிடம் கேட்ட போது, அவர்கள் சரியான பதிலளிக்காமல் மழுப்பியுள்ளனர்.

இதையடுத்து, தேரை கிடந்த உணவை வீடியோவாக பதிவு செய்து சமூக வலைத்தளங்களில் பதிவிட்டார். இந்த வீடியோ சமூக வலைத்தளங்களில் வைரலான நிலையில், உணவில் தேரை கிடந்த ஓட்டலுக்கு சீல் வைத்து உணவு பாதுகாப்பு துறை அதிகாரிகள் அதிரடி நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# ரூ.5 ஆயிரம் லஞ்சம் வாங்கிய கிராம உதவியாளர் கைது




ராமநாதபுரம், மே.6

ராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் தாலுகா காக்கூர் கிராமத்தைச் சேர்ந்த ஒருவர், பட்டாவில் பெயர் மாற்றம் செய்ய ஆன்லைனில் விண்ணப்பம் செய்துள்ளார்.

இதற்காக கிராம உதவியாளர் ராசையா ரூ. 5 ஆயிரம் லஞ்சம் கேட்கப்பட்டதாக கூறப்படுகிறது. ஆன்லைனில் விண்ணப்பம் செய்த நபர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு போலீசில் புகார் அளித்தார்.

இதனையடுத்து, கிராம உதவியாளர் ராசையா லஞ்சப் பணத்தை பெற்ற போது, அவரை கையும்,களவுமாக பிடித்து போலீசார் கைது செய்தனர்.

# தூத்துக்குடி அரசு இசைப்பள்ளியில் மாணவர் சேர்க்கை




தூத்துக்குடி, மே.6

தூத்துக்குடி மாவட்ட கலெக்டர் இளம்பகவத் வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறியிருப்பதாவது:

தூத்துக்குடி மாவட்ட அரசு இசைப்பள்ளியில் 20252026ம் கல்வியாண்டிற்கான மாணவ மாணவியர் சேர்க்கை நாளை (மே 5) முதல் நடைபெற உள்ளது. இப்பள்ளியில் சேர்வதற்கு வயது வரம்பு 12 வயதுக்கு மேல் 25 வயதுக்குள் இருக்க வேண்டும். குரலிசை, பரதநாட்டியம், வயலின், மிருதங்கம் ஆகிய கலைகளுக்கு 7ம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். தவில், நாதஸ்வரம், தேவாரம் ஆகிய கலைகளுக்கு எழுதப்படிக்கத் தெரிந்திருந்தால் போதுமானது. இசைப்பள்ளி படிப்பின்கால அளவு 3 ஆண்டுகள் ஆகும். இப்பள்ளியில் பயிலுகின்ற அனைத்து மாணவர்களுக்கும் மாதம் தோறும் ரூ.400 உதவித்தொகை வழங்கப்படும். அனைத்து மாணவ மாணவிகளுக்கு அரசு விடுதி வசதியும் செய்து தரப்படும் வெளியிடங்களிலிருந்து வரும் மாணவர்களுக்கு இலவச பேருந்து கட்டண வசதியும் செய்து தரப்படும்.

மூன்று ஆண்டுகள் பயின்று அரசுத் தேர்வுகள் இயக்ககம் நடத்தும் தேர்வில் தேர்ச்சி பெறும் மாணவர்கள் கர்நாடக இசைக் கச்சேரிகள் நடத்தவும், நாதஸ்வரம் மற்றும் தவில் வாசித்து தொழில் புரியவும், தேவாரம் பாடுதல் மற்றும் கோயில்களில் பணிபுரியவும், வானொலி மற்றும் தொலைக்காட்சிகளில் நடத்தப்படும் இசை நிகழ்ச்சிகளில் பங்கு பெற்று திறமைகளை வெளிப்படுத்தவும் வாய்ப்புகள் உள்ளன. கோவில்களில் தேவார ஓதுவார் பணியில் சேர்ந்திட இப்பள்ளியில் தேவார இசைப் பயின்று தேர்ச்சி பெற்ற மாணவ மாணவிகளுக்கு முன்னுரிமை அளித்து வேலை வாய்ப்பு அளிக்க வேண்டும் என அரசு ஆணையிட்டுள்ளது.

ஆகவே கலை ஆர்வமுள்ள மாணவ மாணவிகள் அனைவரும் இந்த அரிய வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளலாம். மேலும் விபரங்களுக்கு தலைமை ஆசிரியை, Tசவேரியார்புரம், சிலுவைபட்டி அஞ்சல், தூத்துக்குடி 2 என்ற முகவரியிலும், 9487739296 என்ற கைபேசி எண்ணிலும் தொடர்பு கொள்ளலாம்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# செம்மொழி நாள் விழா: தூத்துக்குடியில் மே 9ம் தேதி பள்ளி மாணவர்களுக்கு போட்டிகள் அறிவிப்பு



தூத்துக்குடி, மே.6

தூத்துக்குடி மாவட்ட கலெக்டர் இளம்பகவத் வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறியிருப்பதாவது:

தமிழ் வளர்ச்சித் துறையின் 2024, 2025ம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை அறிவிப்பில் "தமிழுக்கு செம்மொழித் தகுதி பெற்றுத் தந்த முத்தமிழறிஞர் கலைஞரின் பெருமையைப் போற்றிடும் வகையில் அவர் பிறந்த நாளான ஜூன் 3ம் நாள் தமிழ்நாடு அரசின் சார்பில் ஆண்டுதோறும் செம்மொழி நாள் விழாவாகக் கொண்டாடப்படும்" என்று அமைச்சரால் அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

இந்த அறிவிப்பினைத் தொடர்ந்து 2025ம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்த நாளான ஜூன் 3 அன்று செம்மொழி நாள் விழாமுன்னிட்டு மாவட்ட அளவில் 11 மற்றும் 12ம் வகுப்பு பயிலும் பள்ளி மாணவர்களுக்கான கட்டுரை, பேச்சுப்போட்டிகள் 9.5.2025 அன்று தூத்துக்குடி புனித மரியன்னை ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் காலை 9 மணிக்கு நடைபெற உள்ளது. அது போன்று கல்லூரி மாணவர்களுக்கான கட்டுரை, பேச்சுப் போட்டிகள் 10.5.2025 அன்று தூத்துக்குடி காமராஜ் கல்லூரியில் காலை 9 மணிக்கு நடைபெற உள்ளது.

இப்போட்டிகளில் பங்கேற்கும் கல்லூரி மாணவர்களை திருநெல்வேலி மண்டல கல்லூரிக்கல்வி இணை இயக்குநரும், பள்ளி மாணவர்களை மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரும் தெரிவுசெய்து அனுப்புவர். போட்டிக்கான தலைப்புகள் கல்லூரி மாணவர்களுக்கு கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் வாயிலாகவும், பள்ளி மாணவர்களுக்கு முதன்மைக் கல்வி அலுவலர் வாயிலாகவும் தெரிவிக்கப்படும்.

பள்ளி மாணவர்களுக்கு முத்தமிழறிஞர் கலைஞர் எழுத்தில் சமூகநீதி என்ற தலைப்பில் கட்டுரைப் போட்டியும், கவிஞர் முத்தமிழறிஞர் கலைஞர், மொழியின் நாயகர் முத்தமிழறிஞர் ஆகிய 2 தலைப்புகளில் பேச்சுப் போட்டியும் நடைபெறும்.

இதேபோல் கல்லூரி மாணவர்களுக்கு முத்தமிழறிஞர் கலைஞரின் கடித இலக்கியம் என்ற தலைப்பில் கட்டுரை போட்டியும், முத்தமிழறிஞர் கலைஞரின் ஆக்கமும் செம்மொழித் தாக்கமும், தலைவர் கலைஞரின் தமிழ் தேசிய உணர்வு ஆகிய 2 தலைப்புகளில் பேச்சுப் போட்டியும் நடைபெறும்.

11 மற்றும் 12ம் வகுப்பு பயிலும் பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கான கட்டுரை மற்றும் பேச்சுப்போட்டியில் வெற்றி பெறும் மாணவர்களுக்கு மாவட்ட அளவில் முதல் பரிசாக ரூ.10 ஆயிரம், இரண்டாம் பரிசாக ரூ.7 ஆயிரம், மூன்றாம் பரிசாக ரூ.5 ஆயிரம் மற்றும் பாராட்டுச் சான்றிதழ் வழங்கப்படும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# நெல்லையில் மோட்டார் சைக்கிள் திருடிய வாலிபர் கைது




திருநெல்வேலி மே.6

நெல்லை மாவட்டம், திருக்குறுங்குடி, வடக்கு ரதவீதியைச் சேர்ந்த தினேஷ் 1.5.2025 அன்று தனது வீட்டின் முன்பு தனது மோட்டார் சைக்கிளை நிறுத்திவிட்டு, இரவில் தூங்கிவிட்டு மறுநாள் காலை வந்து பார்த்தபோது தனது மோட்டார்சைக்கிளை காணவில்லை. இதுகுறித்து தினேஷ் திருக்குறுங்குடி காவல் நிலையத்தில் புகார் அளித்தார். அந்த புகாரின் அடிப்படையில் சப் இன்ஸ்பெக்டர் முருகன் வழக்குப்பதிவுசெய்து விசாரணை மேற்கொண்டனர். அதில் உத்தமபாண்டியபுரம், வடக்கு தெருவைச் சேர்ந்த சூர்யா (வயது 20) என்பவர் மோட்டார் சைக்கிளை திருடியது தெரியவந்தது. இதனையடுத்து மேற்சொன்ன சப் இன்ஸ்பெக்டர் சூர்யாவை கைது செய்து நடவடிக்கை எடுத்தார்.

# மதுரை விமானநிலையத்தில் கூட்ட நெரிசல்: தவெக தொண்டர்கள் மீது வழக்குப்பதிவு

மதுரை, மே.6

கொடைக்கானலில் நடந்த ஜனநாயகன் படப்பிடிப்பில் கலந்து கொள்ள த.வெ.க. தலைவர் விஜய் கடந்த 1ந்தேதி மதுரைக்கு வந்தார். அவரை விமான நிலையத்தில் த.வெ.க. தொண்டர்கள் நூற்றுக்கணக்கானோர் திரண்டு வரவேற்றனர்.

ஒரே நேரத்தில் ஒரே இடத்தில் பலர் கூடியதால், அங்கு தள்ளுமுள்ளு ஏற்பட்டது.

இந்த நிலையில் விமான நிலையத்தில் அனுமதியின்றி கூடுதல், பயணிகளுக்கு இடையூறு ஏற்படுத்துதல் உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளின்கீழ் த.வெ.க. மதுரை மாவட்ட செயலாளர் தங்கபாண்டி (தெற்கு), கல்லணை (வடக்கு) மற்றும் நிர்வாகிகள் மீது பெருங்குடி போலீசார் வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

தினகனி

Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253

6.5.2025

## டாட்டூ கடை தொழிலாளர்கள் மாவட்ட கலெக்டரிடம் மனு

கன்னியாகுமரி, மே.6

கன்னியாகுமரியில் 'டாட்டூ' கடை தொழிலாளர்கள்'டாட்டூ'தொழிலை செய்ய அனுமதிக்குமாறு மாவட்ட கலெக்டரிடம் மனு அளித்துள்ளனர் . அந்த மனுவில் ,

கன்னியாகுமரிநகராட்சி மற்றும்தேவஸ்தானம்பகுதியில் கடந்த 10 வருடங்களாக 30க்கும் மேற்பட்ட 'டாட்டூ' கடைகள் நடத்தி வருகிறோம். இதில் நூற்றுக்கும் அதிகமான குடும்பங்கள் இத்தொழிலை நம்பி வாழ்ந்து வருகிறோம்.




மேலும் அனைவரும் முறையாக 'டாட்டூ' பயிற்சி படித்த சான்றிதழ் பெற்றுள்ளோம்.. இந்நிலையில் மே 1ம் தேதி 'டாட்டூ' கடைகளை நடத்த கூடாது என்று வாய்மொழியாக உத்தரவு பிறப்பித்ததால் அனைத்து 'டாட்டூ' கடைகளை அடைத்துள்ளோம். எங்களின் வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு 'டாட்டூ ' தொழிலை செய்ய அனுமதிக்குமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம் என தெரிவித்துள்ளனர்.

## ஒகேனக்கல் காவிரி ஆற்றில் மூழ்கி 2 இளைஞர்கள் பலி

ஒகேனக்கல், மே.6

கோடைகாலம் என்பதால் ஒகேனக்கல்லுக்கு ஏராளமான சுற்றுலா பயணிகள் குவிந்து வருகின்றனர். இந்த நிலையில் இன்றும் கூட்டம் அதிகளவு காணப்பட்டது. கடலூர் மாவட்டம் பண்ருட்டி பகுதியை சேர்ந்த 20 இளைஞர்கள் ஒரு சுற்றுலா வாகனத்தில் இன்று ஒகேனக்கல்லுக்கு வந்தனர். காலையில் அப்பகுதியை சுற்றி பார்த்து விட்டு பின்னர் ஆற்றில் குளிக்கலாம் என முடிவு செய்தனர்.

ஒகேனக்கல்லில் அதிக சுழல் உள்ள பகுதியான சேமலை தோட்டம் பகுதியில் குளித்துள்ளனர். அப்போது அதில் இருவர் விளையாட்டு போக்கில் ஆழமான பகுதிக்கு சென்றுவிட்டனர். இதனால் சுழலில் சிக்கிக்கொண்டனர்.



இந்த நிலையில் நீரில் மூழ்கி தனசேகரன் மற்றும் ரவி இருவரும் பரிதாபமாக உயிரிழந்தனர். தகவலின் பேரில் தீயணைப்புத்துறையினரும், ஒகேனக்கல் போலீசாரும் சம்பவ இடத்திற்கு விரைந்தனர். சுழலில் சிக்கிய இளைஞர்களின் உடலை மீட்கும் பணியில் தீயணைப்புத்துறையினர் தற்போது ஈடுபட்டு வருகின்றனர்.

## நீட் தேர்வு.. மாணவ, மாணவிகள் நடத்தப்பட்ட விதம் நாகரிக சமூகத்திற்கு தலைகுனிவை ஏற்படுத்தியுள்ளது முத்தரசன்

சென்னை, மே.6

இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநில செயலாளர் முத்தரசன் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

நீட் தேர்வு காரணமாக மருத்துவப் படிப்பில் மாணவர் சேர்க்கை பாதிக்கப்படுவதால், தமிழ்நாடு நீட் தேர்வுக்கு எதிர்ப்பு தெரிவித்து வருகிறது. பள்ளி இறுதி வகுப்பில் நல்ல மதிப்பெண் பெற்று வரும் மாணவ, மாணவிகள் நீட் தேர்வு அச்சம் காரணமாக தற்கொலைக்கு தள்ளப்படுகிறார்கள். நீட் தேர்வில் இருந்து தமிழ்நாட்டிற்கு விதிவிலக்கு வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை பாஜக மத்திய அரசு பிடிவாதமாக மறுத்து வருவதால் அரியலூர் அனிதா முதல் மேல்மருவத்தூர் அருகில் உள்ள அகிலி கிராமத்தின் காயத்திரி வரை 22 பேர் கொல்லப்பட்டுள்ளனர். தமிழ்நாட்டில் மட்டும் அல்லாமல் மத்திய பிரதேசத்தில் இருந்து ராஜஸ்தானுக்கு நீட் தேர்வு எழுத வந்த மாணவி இரவு படுக்கைக்கு சென்றவர் விடியும் முன்பு தற்கொலை செய்து கொண்டுள்ளார்.


மனித உயிர்களை காவு வாங்கும் நீட் தேர்வில் இருந்து தமிழ்நாட்டுக்கு விலக்களிக்க வேண்டும் என தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் இருமுறை தீர்மானம் நிறைவேற்றி, குடியரசுத் தலைவருக்கு அனுப்பப்பட்டும், மத்திய அரசு அசைந்து கொடுக்கவில்லை. தொடர்ந்து தமிழ்நாட்டை வஞ்சித்து வரும் பாஜகவுடன் கூட்டணி அமைப்பதில் ஆர்வம் காட்டிய எதிர்கட்சித் தலைவர், மாநில அரசு மீது அடிப்படையற்ற அவதூறு பேசி, மக்கள் கவனத்தை திசை திருப்பும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறார். நீட் தேர்வு மையங்களில் மாணவ, மாணவிகள் நடத்தப்பட்ட விதம் நாகரிக சமூகத்திற்கு தலைகுனிவை ஏற்படுத்தியுள்ளது. உயிருக்கும் மேலாக கருதும் "தாலி" கழட்டி வைக்க வேண்டும் என்பது தமிழர் மரபுக்கும், பண்பாட்டிற்கும் எதிரானது. சட்டை பட்டன்கள் கூட எண்ணி பார்த்து அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. தேர்வு மையத்தில் நுழையும் முன்பாகவே பதற்றத்தையும், படபடப்பையும் உருவாக்கிய அடக்குமுறையை இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வன்மையாகக் கண்டிப்பதுடன், இனியும் தாமதிக்காமல் நீட் தேர்வில் இருந்து தமிழ்நாட்டுக்கு விலக்களிக்க வேண்டும் என பாஜக தலைமையிலான மத்திய அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பரங்கிமலையில் மூடப்பட்ட ரெயில்வே சுரங்க வழியை திறந்து விட வேண்டும் பயணிகள் கோரிக்கை

சென்னை, மே.6

சென்னை, பரங்கிமலை ரெயில் நிலையத்திற்கு ரெயில் பயணிகள் வரும் சுரங்க நடைபாதை நிரந்தரமாக மூடப்பட்டுள்ளது. இதனால்மூத்தகுடிமக்கள், நோயாளிகள் மேம்பாலத்தில் ஏறி அல்லது 200 மீட்டர் தொலைவில் உள்ள Escalatorல் ஏற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

இந்த சுரங்க வழியை ஆதம்பாக்கம் மேற்கு, வேளச்சேரி, மடுவின்கரை, வானுவம்பேட்டை, புழுதிவாக்கம் பகுதிகளைச் சேர்ந்த பயணிகள் பயன்படுத்தி வந்தனர். தற்போது மூடப்பட்ட சுரங்க வழியை 75 சதவீதம் பயணிகள் பயன்படுத்தி வந்தார்கள். தற்போது மூத்த குடிமக்கள், பெண்கள், லக்கேஜ் உடன் வரும் பயணிகள் பரங்கிமலை ரெயில் நிலையம் வருவதை தவிர்த்து சிரமப்படுகிறார்கள். தென்னக ரெயில்வே நிர்வாகம் உடனடியாகத் தலையிட்டு பரங்கிமலையில் மூடப்பட்ட சுரங்க வழியை பயணிகளுக்கு திறந்து விட வேண்டும் என்று மேற்கண்ட பகுதிகளைச் சேர்ந்த ரெயில் பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



## மகளிர் சுய உதவிக் குழு: அடையாள அட்டைகள் வழங்கும் பணியை 9 மாதங்களில் முடிக்க இலக்கு

சென்னை, மே.6

தமிழ்நாட்டில் மகளிர் சுய உதவிக் குழுக்களில் இடம்பெற்றுள்ள 60 லட்சம் மகளிருக்கு அடையாள அட்டைகள் வழங்கும்பணியை9மாதங்களில் முடிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது .

அரசால் உருவாக்கப்பட்ட சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த மகளிருக்கு முதல் கட்டமாகவும், தன்னார்வ தொண்டு நிறுவனங்களால் உருவாக்கப்பட்ட குழுக்களின் உறுப்பினர்களுக்கு 2வது கட்டமாகவும் அடையாள அட்டைகள் வழங்கப்பட உள்ளது.

மகளிர் சுய உதவிக்குழு அடையாள அட்டை வைத்திருக்கும் பெண்கள், ஏசி பேருந்துகளைத் தவிர்த்து அரசுப் போக்குவரத்துக் கழக பேருந்துகளில் 25 கிலோ வரை தயாரிப்பு பொருட்களைக் கட்டணமின்றி எடுத்த செல்ல அனுமதிக்கப்படுவார்கள்.



கோ ஆப்டெக்ஸில் துணிகள் வாங்கும் போது 5% கூடுதல் தள்ளுபடியும் வழங்கப்படும். கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை வழங்கக்கூடிய கடனுதவி திட்டங்களில் முன்னுரிமை அளிக்கப்படும்.

ஆவின் நிறுவன பொருள்களைச் சலுகை விலையில் பெறலாம். இணைய சேவை மய்யங்களின் சேவைகளைப் பெறும் போது, 10% தள்ளுபடி அளிக்கப்படும்.

## ஆந்திராவின் கண்டலேறு அணையில் இருந்து தமிழ்நாட்டுக்கு தண்ணீர் திறப்பு

சென்னை, மே.6

சென்னை நகர மக்களின் குடிநீர் தேவையை நிறைவேற்றும் பிரதான ஏரியாக பூண்டி ஏரி உள்ளது. இதில் மழைநீர்மற்றும்கிருஷ்ணா நீர் பங்கீடு திட்டத்தின்படி ஆந்திர மாநிலம் நெல்லூர் அருகே உள்ள கண்டலேறு அணையில் இருந்து பெறப்படும் தண்ணீரை சேமித்து வைத்து தேவைப்படும் போது புழல், செம்பரம்பாக்கம் ஏரிகளுக்கு திறந்து விடப்படுவது வழக்கம்.

கிருஷ்ணாநதிநீர் பங்கீடு திட்டத்தின்படி ஆந்திரா அரசு வருடம் தோறும் தமிழகத்திற்கு 12 டி.எம்.சி. தண்ணீர் வழங்க வேண்டும். அதன்படி ஆந்திராவின் கண்டலேறு அணையில் இருந்து கிருஷ்ணா நதியில், விநாடிக்கு 500 கன அடி வீதம் தமிழ்நாட்டுக்கு தண்ணீர் திறக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பின்னர் திறக்கப்படும் நீரானது, அடுத்த 3 நாட்களில் தமிழ்நாட்டின் எல்லையான ஊத்துக்கோட்டை ஜீரோ பாயிண்ட்டுக்கு வந்தடையும். இந்த நீர், பூண்டி அணையில்தேக்கப்பட்டு, சென்னையின் குடிநீர் தேவைக்கு பயன்படுத்தப்படும்.

## 'டார்பிடோ' அப்டேட் கொடுத்த இயக்குனர்




தருண் மூர்த்தி இயக்கத்தில் மோகன்லால் நடிப்பில் சமீபத்தில் திரையரங்குகளில் வெளியாகி அமோக வரவேற்பை பெற்று வரும் படம் 'தொடரும்'. வருகிற 9ம் தேதி இப்படம் தமிழிலும் வெளியாக உள்ளது.


இப்படத்தை தொடர்ந்து தருண் மூர்த்தி 'டார்பிடோ' என்ற படத்தை இயக்க உள்ளார். இதில், பகத் பாசில், அர்ஜுன் தாஸ் உள்ளிட்டோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடிக்க உள்ளனர். இந்நிலையில், சமீபத்திய பேட்டியில்இயக்குனர்இப்படஅப்டேட்கொடுத்தார்.அவர்பேசுகையில்,

"பகத் பாசில் மற்றும் அர்ஜுன் தாஸ் ஆகியோருடன் எனது அடுத்த படம் உருவாக உள்ளது. சமீபத்தில்தான் அப்படத்தின் அறிவிப்பை வெளியிட்டோம். இதற்கு 'டார்பிடோ' என்று பெயரிடப்பட்டுள்ளது. இது ஒரு வகையான திரில்லர் படம். இந்த ஆண்டு இறுதியில் படத்தின் படப்பிடிப்பைத் தொடங்குவோம்" என்றார்.

## 'என் படத்தின் காலை காட்சியை பார்ப்பவர்கள் அதிர்ஷ்டசாலிகள், ஏனென்றால்...' சுபம் இயக்குனர்

விரைவில் வெளியாகவுள்ள ஹாரர்காமெடி படமான 'சுபம்' மூலம் நடிகை சமந்தா தயாரிப்பாளராக அறிமுகமாக உள்ளார். சமீபத்தில் வெளியான இப்படத்தின் டிரெய்லர் எதிர்பார்ப்புகளை அதிகரித்துள்ளது.


பிரவீன் காண்ட்ரேகுலா இயக்கத்தில் வருகிற 9ம் தேதி வெளியாக உள்ள இப்படத்தை எதிர்பார்த்து ரசிகர்கள் ஆவலுடன் காத்திருக்கின்றனர். இப்படத்தில் ஹர்ஷித் மல்கிரெட்டி, ஷாலினி கொண்டேபுடி, ஷ்ரியா கொந்தம், ஷ்ரவாணி, சரண் பெரி மற்றும் கவிரெட்டி ஸ்ரீனிவாஸ் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர்



இதற்கிடையில், இப்படத்தின் பிரீரிலீஸ் நிகழ்ச்சி நேற்று விசாகப்பட்டினத்தில் நடைபெற்றது.

அதில் இயக்குனர் பேசுகையில், "சுபம் படத்தின்காலை காட்சியை பார்ப்பவர்கள் மிகவும் அதிர்ஷ்டசாலிகள். ஏனென்றால் அவர்கள்தான் படத்தை பரப்புவார்கள். சுபம் படத்தை பார்த்து ஆச்சரியப்பட்டு, அதை மற்றவர்களுக்குப் பரிந்துரைப்பார்கள். சுபம் பிளாக்பஸ்டர் படம். இது என்னுடைய வாக்குறுதி" என்றார். இந்த பேச்சு இணையத்தில் வைரலாகி வருகிறது.

## 'சூர்யா 46' படப்பிடிப்புக்கு முன்பே விற்கப்பட்ட ஓடிடி உரிமம்... இத்தனை கோடிக்கா?



நடிகர் சூர்யா தற்போது தனது 45வது படத்தில் நடித்து வருகிறார். ஆர்.ஜே. பாலாஜி இயக்கி வரும் இப்படத்தில் திரிஷா கதாநாயகியாக நடிக்கிறார். இப்படத்தை தொடர்ந்து சூர்யாவின் 46 வது படத்தை 'லக்கி பாஸ்கர்' பட இயக்குனர் வெங்கி அட்லூரி இயக்குகிறார்.

சித்தாரா என்டர்டெயின்மென்ட் நிறுவனம் தயாரிக்கவுள்ள இப்படத்திற்கு தற்காலிகமாக 'சூர்யா 46' என்று பெயரிடப்பட்டுள்ளது. ஜிவி பிரகாஷ் இசையமைக்க உள்ள இப்படத்தின் படப்பிடிப்பு விரைவில் துவங்க உள்ளது.

இந்த நிலையில், இப்படத்தின் படப்பிடிப்பு துவங்குவதற்கு முன்பே ஓடிடி உரிமம் விறகப்பட்டுவிட்டதாக தகவல் வெளியாகி உள்ளது. அதனை நெட்பிளிக்ஸ் நிறுவனம் ரூ. 85 கோடிக்கு வாங்கியுள்ளதாகவும் கூறப்படுகிறது. இருப்பினும் இது பற்றி படக்குழுவினரிடமிருந்து எந்த தகவலும் வெளியாகவில்லை.

## எங்கள் பிளேஆப் கனவு இன்னும் உயிர்ப்புடன் உள்ளது ரிஷப் பண்ட் பேட்டி




ஐ.பி.எல். தொடரில் தர்மசாலாவில் நேற்று நடைபெற்ற லீக் ஆட்டத்தில் பஞ்சாப் கிங்ஸ் லக்னோ சூப்பர் ஜெயன்ட்ஸ் அணிகள் மோதின. இந்த போட்டியில் முதலில் பேட்டிங் செய்த பஞ்சாப் 20 ஓவரில் 5 விக்கெட்டை இழந்து 236 ரன்கள் எடுத்தது. பஞ்சாப் தரப்பில் பிரப்சிம்ரன் சிங் 91 ரன்கள் எடுத்தார்.

தொடர்ந்து 237 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களம் புகுந்த லக்னோ 20 ஓவரில் 7 விக்கெட்டை இழந்து 199 ரன்கள் மட்டுமே எடுத்தது. இதன் மூலம் 37 ரன் வித்தியாசத்தில் பஞ்சாப் அபார வெற்றி பெற்றது. இந்த போட்டியின் ஆட்டநாயகன் விருது பிரப்சிம்ரன் சிங்குக்கு வழங்கப்பட்டது.

இந்நிலையில், இந்த போட்டியில் தோல்வி கண்ட பின்னர் லக்னோ கேப்டன் ரிஷப் பண்ட் அளித்த பேட்டியில் கூறியதாவது, இந்த போட்டியின் போது நாங்கள் அதிக ரன்கள் விட்டுக் கொடுத்து விட்டோம். முக்கியமான நேரங்களில் கேட்சை தவறவிட்டால் அதற்காக கஷ்டப்பட்டு தான் ஆக வேண்டும். நாங்கள் இந்த போட்டியில் சரியான இடத்தில் பந்துவீசவில்லை என்று நினைக்கிறேன் அதுவே தோல்விக்கு காரணம்.

எங்கள் பிளேஆப் கனவு இன்னும் உயிர்ப்புடன் உள்ளது. இந்த போட்டியில் நாங்கள் தோல்வியை சந்தித்தாலும் அடுத்த மூன்று போட்டிகளில் வெற்றி பெற்று பிளே ஆப் சுற்றுக்கு செல்வோம் என்ற நம்பிக்கை இருக்கிறது. இந்த போட்டியில் டாப் ஆர்டர் வீரர்கள் சிறப்பாக விளையாடவில்லை. அதனால் மிடில் ஆர்டர் அழுத்தத்தை சந்தித்தது. மிடில் ஆர்டரில் எங்களாலும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்த முடியவில்லை.

எல்லா போட்டியிலும் டாப் ஆர்டர் வீரர்கள் மட்டுமே சிறப்பாக விளையாட வேண்டும் என்று நினைப்பது தவறு. ஒவ்வொருவருமே தங்களது பணியை சிறப்பாக செய்ய வேண்டும். இந்த போட்டியில் இலக்கு பெரியதாக இருந்ததாலே தோல்வியை சந்திக்க நேர்ந்தது. இவ்வாறு அவர் கூறினார்.

## லக்னோவுக்கு எதிரான வெற்றி... பஞ்சாப் கேப்டன் ஸ்ரேயாஸ் கூறியது என்ன..?

ஐ.பி.எல். தொடரில் தர்மசாலாவில் நேற்று நடைபெற்ற லீக் ஆட்டத்தில் பஞ்சாப் கிங்ஸ் லக்னோ சூப்பர் ஜெயன்ட்ஸ் அணிகள் மோதின. இந்த போட்டியில் முதலில் பேட்டிங் செய்த பஞ்சாப் 20 ஓவரில் 5 விக்கெட்டை இழந்து 236 ரன்கள் எடுத்தது. பஞ்சாப் தரப்பில் பிரப்சிம்ரன் சிங் 91 ரன்கள் எடுத்தார்.


தொடர்ந்து 237 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களம் புகுந்த லக்னோ 20 ஓவரில் 7 விக்கெட்டை இழந்து 199 ரன்கள் மட்டுமே எடுத்தது. இதன் மூலம் 37 ரன் வித்தியாசத்தில் பஞ்சாப் அபார வெற்றி பெற்றது. இந்த போட்டியின் ஆட்டநாயகன் விருது பிரப்சிம்ரன் சிங்குக்கு வழங்கப்பட்டது.

இந்நிலையில், இந்த போட்டியில் வெற்றி பெற்ற பின்னர் பஞ்சாப் கேப்டன் ஸ்ரேயாஸ் ஐயர் அளித்த பேட்டியில் கூறியதாவது, உண்மையில் இந்த வெற்றியால் மகிழ்ச்சி. அனைவரும் சரியான நேரத்தில் அசத்துகின்றனர். ஒவ்வொரு வீரர்களிடமும் இருந்து கிடைக்கும் பங்களிப்பு மகத்தானது. பிரப்சிம்ரன் இன்று அற்புதமாக விளையாடியதைப் பார்த்தது சிறப்பாக இருந்தது.

நல்லவேளையாக தரம்சாலா மைதானத்தில் எங்களுடைய ரெக்கார்ட் பற்றி எனக்குத் தெரியாது. பிட்ச்சை பார்த்து போட்டியை வெல்ல வேண்டும் என்பதே எனது மனநிலையாக இருந்தது. இதுவரை நாங்கள் அதிர்ஷ்டத்துடன் இருந்துள்ளோம். எங்களுடைய அர்ப்பணிப்பு, கடின உழைப்பு ஆகியவற்றால் அதிர்ஷ்டம் எங்கள் பக்கம் இருக்கிறது. வீரர்கள் அனைவரும் தங்களுடைய வேலையை அறிந்து சரியான நேரத்தில் அசத்துகின்றனர்.

நாங்கள் களத்தில் நகரும் விதம் மற்றும் விழிப்புணர்வு ஆகியவற்றில் மட்டுமே சரியாக இருக்க வேண்டும். புள்ளி விவரங்களைப் பற்றி அதிகம் சிந்திக்காமல் உங்களுக்கு நீங்களே ஆதரவு கொடுத்து உங்களது உள்ளுணர்வுகளைப் பின்பற்றி எப்படி அசத்த முடியும் என்று பார்க்க வேண்டும். வெற்றி முடிவு என்பது முக்கியமானது. இவ்வாறு அவர் கூறினார்.

## மாட்ரிட் ஓபன் டென்னிஸ்: சாம்பியன் பட்டம் வென்றார் கேஸ்பர் ரூட்



மாட்ரிட் ஓபன் சர்வதேச டென்னிஸ் போட்டி ஸ்பெயினில் நடைபெற்றது. இதில் பல முன்னணி வீரர் மற்றும் வீராங்கனைகள் கலந்து கொண்டு விளையாடினர். இதில் ஆண்கள் ஒற்றையர் பிரிவின் இறுதிப்போட்டி நேற்று நடைபெற்றது. இந்த போட்டியில் முன்னணி வீரரான கேஸ்பர் ரூட் (நார்வே), பிரிட்டனின் ஜேக் டிராபர் உடன் மோதினார். இந்த போட்டியின் முதல் செட்டை 75 என்ற புள்ளிக்கணக்கில் கேஸ்பர் ரூட்டும், 2வது செட்டை 63 என்ற புள்ளிக்கணக்கில் ஜேக் டிராபரும் கைப்பற்றினர். இதையடுத்து வெற்றியாளரை தீர்மானிக்கும் 3வது செட்டில் அனல் பறந்தது. இதில் அபாரமாக செயல்பட்ட கேஸ்பர் ரூட் 64 என்ற புள்ளிக்கணக்கில் ஜேக் டிராபை வீழ்த்தி சாம்பியன் பட்டத்தை வென்றார்.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.